**கொழும்பு பெரும்பாக நகர அபிவிருத்திச் செயற்திட்டம்  - 2020**

கொழும்பு பெரும்பாக நகர அபிவிருத்திச் செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் மீள்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கிக்கும் (ஐபீஆர்டி) இடையே கைச்சாத்திடப்பட்ட 2012 மே 18 ஆந் திகதிய 8145-எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 2 ஆம் பட்டோலையின் II (பீ.3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்டக் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சாகவிருந்த தற்போதைய நகர அபிவிருத்தி நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் நகர அபிவிருத்தி அதிகாரசபை, இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் மற்றும் கொழும்பு மாநகர சபை என்பன செயற்திட்டத்தின் அமுல்ப்படுத்தல் முகவர்களாகவும் உள்ளன. கொழும்பு நீர்வடிநில வடிகாண்களில் வெள்ளம் ஏற்படுவதனைக் குறைத்தல், கொழும்பு தலைநகர் பிரதேசத்திலுள்ள உள்ளூராட்சி சபைகளின் இயலளவை வலுப்படுத்துதல், தெரிவுசெய்யப்பட்ட நிரூபிக்கப்பட்ட முதலீடுகள் ஊடாக உள்ளூர் உட்கட்டமைப்பு மற்றும் சேவைகளை மேம்படுத்தி பராமரித்தல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 42,031.74 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 321 மில்லியனானதுடன் அதில் ரூபா 27,890.22 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 213 மில்லியன் மீள்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கியினால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2012 யூலை 10 இல் தொடங்கியிருந்ததுடன் 2017 யூன் 30 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. பின்னர் செயற்திட்டக் காலப்பகுதி 2021 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல. | கணக்கீட்டுக் குறைபாடுகள் | முகாமைத்துவ பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | வெளிநாட்டு கடனுக்கான வட்டி கொடுப்பனவை பதிவு செய்வதற்கு சீரான முறையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை. மேலும் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டிற்கான முறையே ரூபா 68.54 மில்லியன் மற்றும் ரூபா 155.27 மில்லியன் வட்டிக் கொடுப்பனவு மாத்திரமே நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டு வரப்பட்டிருந்தன. | 2018, 2019 & 2020 நிதியாண்டுகளிற்கான வட்டிக் கட்டணங்கள் திறைசேரியிடம் இருந்து இறுதியாக்கப்பட்ட வட்டிக் கட்டணங்கள் கிடைக்காததால் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு முனனர் தொடர்புடைய செயற்திட்டச் செலவினங்களை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ஒப்பந்ததாரர்களிடம் இருந்து தாமதக் கட்டணங்களாக அறவிடப்பட்ட ரூபா 87.40 மில்லியன் தொகை நிதிக்கூற்றுக்களின் நடைமுறைப் பொறுப்பின் கீழ் ஒப்பந்ததாரர்களுக்கு செலுத்த வேண்டியவைகளாக பிழையாகக் காட்டப்பட்டிருந்தன. | கோரப்படாத தாமதக் கட்டணங்களின் மிகுதி தொகை 2021 ஆம் ஆண்டில் நிதிக்கூற்றுக்களிற்கு சீர்செய்யப்படும். | உரிய பேரேட்டுக் கணக்குகளை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| இல. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவ பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | நிதிப் பிரமாணம் 751 | உண்மையான நேர வெள்ள கட்டுப்பாடு (ஆர்ரீசீ) – உப செயற்திட்டத்தால் சரக்குப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | சரக்கு பதிவேடு பேணப்படுகிறது. ஆனால் அதில் குறைபாடுகள் உள்ளதால் அதனை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுடன் இணங்குதல் வேண்டும். |
| (ஆ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2019 மார்ச் 15 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 09 ஆம் பந்தி | செயற்திட்ட வழிகாட்டல் குழுவின் கூட்டம் 02 மாதங்களுக்கு ஒருமுறை நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் கூட்டங்கள் எதுவும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | வரிசை அமைச்சின் பணிப்புரையின் பிரகாரம் வழிகாட்டல் குழு கூட்டங்கள் 2020 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்ட வழிகாட்டல் குழு கூட்டங்கள் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடாத்தப்பட வேண்டும். |

3. பௌதீக செயலாற்றல்

3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக மற்றும் நிதி செயன்முன்னேற்றம்

| இல. | கூறு | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ பதில்கள் | கணக்காய்வாளரின பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|---|---|
| | | எதிர்பார்க்கப் பட்ட பௌதீக செயலாற்றல் | அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல் | | | | |
| | | | பௌதீக | நிதி | | | |
| (அ) | புதிய முகத்துவாரம் ரொறிங்ரன் சுரங்கத்தின் வடிவமைப்பு மற்றும் நிர்மாணம் | 100 | 76 | 66 | அக் குறிப்பிடத்தக்க தாமதங்கள் காரணமாக ஒட்டுமொத்த செயற்திட்டக் காலப்பகுதி 2021 யூன் வரை நீடிக்கப்பட வேண்டியிருந்ததுடன் பொது மக்கள் நிர்மாணப் பணிகளால் அசௌகரியங்களை எதிர்கொண்டனர். மேலும் பொது மக்களால் எதிர்பார்க்கப்பட்ட நலன்களை உரிய நேரத்தில் அடைந்து கொள்ள முடியாதிருந்ததுடன் நடவடிக்கைகளின் எதிர்பார்க்கப்பட்ட கிரயம் அதிகமாக இருந்தது. | கொவிட் விளைவைக் கருத்தில் கொள்ளாமல் 2020 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் கொழும்பு பெரும்பாக நகர அபிவிருத்தி செயற்திட்டக் காலப்பகுதி 2021 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது. WHO 2020 மார்ச்சில் உலகளாவிய தொற்றுநோய் நிலைமையை வெளிப்படுத்தியிருந்ததுடன் தற்போதும் (2021 இன் 4 ஆம் காலாண்டு) நாங்கள் இன்னும் அதே சூழ்நிலையில் இருக்கிறோம். செயற்திட்டத்திற்கான கொவிட் 19 தாக்கம் அபரிமிதமானதுடன் இது செயற்திட்டத்தின் முன்னேற்றத்திற்கு இடையூறாக உள்ளது. | பட்டியலிடப்பட்ட ஒப்பந்த காலப்பகுதியினுள் பணிகளை விரைவுபடுத்துவதற்கும் செயற்திட்ட கண்காணிப்பு பிரிவு மூலம் ஒப்பந்த பணிகளை நெருக்கமாக கண்காணிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கோட்டை றம்பாட்டில் உயிரியல் பல்வகைமை பூங்காவின் அபிவிருத்தி | 80 | 100 | 72 | | | |
| (இ) | சென் செபஸ்ரியன் வடக்கு லொக் கதவுகள் மற்றும் பம்பி நிலையத்தின் வடிவமைப்பு மற்றும் நிர்மாணம் | 100 | 96 | 91 | | | |
| (ஈ) | கொலன்னாவ கால்வாய் | 100 | 89 | 78 | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | திசைதிருப்பல் திட்டம் கட்டம் - I | | | |
| (உ) | அம்பத்தலே வெள்ள நீர் பம்பி நிலையத்தின் வடிவமைப்பு மற்றும் நிர்மாணம் | 100 | 89 | 74 |
| (ஊ) | மடிவல கிழக்கு திசைதிருப்பல் கட்டம் III இற்கான மேம்படுத்தல் | 100 | 98 | 75 |
| (எ) | நோரிஸ் கால்வாயின் மேம்படுத்தல் | 100 | 80 | 64 |
| (ஏ) | கொலன்னாவ கால்வாய் திசை திருப்பல் திட்டம் கட்டம் IV | 100 | 83 | 77 |
| (ஐ) | சென் செபஸ்ரியன் தெற்கு லொக்கின் பம்பி நிலையத்தின் பொறி வடிவமைப்பை வழங்கி நிறுவுதல். | 100 | 86 | 64 |

## 3.2 செயற்றிட்ட நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதில் தாமதங்கள்

| இல. | செயற்பாடுகள் | பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்ட திகதி | கையேற்ற திகதி | தாமதங்கள் (நாட்கள்) | முகாமைத்துவ பதில்கள் | கணக்காய்வாளரின பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|---|
| (அ) | நொறிஸ் கால்வாய்க்கான மேம்படுத்தல்கள் | 2019 ஆகஸ்ட் 23 | 2021 மே 05 வரையிலும் பணிகள் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. | 590 | நோரிஸ் கால்வாய் திசைதிருப்பல் பெட்டி வடிகாண் இடத்தை கையேற்பதில் தாமதம் ஏற்பட்டதன் காரணமாக திறக்கப்பட்டிருக்கவில்லை. | பணிகளை விரைவுபடுத்துவதற்கும் ஒப்பந்ததாரர்களின் பணிகளை நெருக்கமாகக் கண்காணிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | சென் செபஸ்ரியன் வடக்கு லொக் கதவுகள் மற்றும் பம்பி நிலையத்தின் வடிவமைப்பு மற்றும் நிர்மாணம் | 2019 யூன் 30 | 2021 மே 05 வரையிலும் பணிகள் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. | 485 | வெள்ளம், மோசமான வானிலை, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மற்றும் கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக தாமதமாகியிருந்தது. | -மேற்படி- |
| (இ) | மதிவெல கிழக்கு திசைதிருப்பல் திட்டம் கட்டம் III இற்கான மேம்படுத்தல்கள் | 2018 சனவரி 10 | 2021 மே 05 வரையிலும் பணிகள் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. | 1125 | பிரத்தியேக உயர் மின்னழுத்த மின் கம்பிகள் மற்றும் அம்பத்தலேயில் இருந்து நீரினை வழங்கும் NWS&DB நீர் சுத்திகரிப்பு குழாய்களை மாற்றுவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக உப செயற்திட்டம் தாமதமாகியிருந்தது. | -மேற்படி- |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (ஈ) | கொலன்னாவ கால்வாய் திசைதிருப்பல் திட்டம் கட்டம் I | 2020 ஏப்ரல் 29 | 2021 மே 05 வரையிலும் பணிகள் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. | 365 | புறவழிச் சாலைப் பணிகள் (bypass road) பூர்த்தியடைவதில் தாமதம், மோசமான வானிலை, பயன்பாட்டு சேவைகள் மாற்றப்படுதல் போன்ற காரணங்களால் உப செயற்திட்டம் தாமதமானது. இந்த செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டு 2020 மே 5 இல் கையளிக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- |
| (உ) | புதிய முகத்துவாரம் ரொறிங்ரன் சுரங்கத்தின் நிர்மாணம் | 2020 மே 30 | 2021 மே 05 வரையிலும் பணிகள் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. | 335 | நாங்கள் கடுமையான சூழ்நிலையில் செயற்படுகிறதால் இந்த ஆண்டுக்குள் செயற்திட்டத்தை (ரொரிங்ரன் சுரங்கப் பாதைகள்) பூர்த்தி செய்வதில் நிச்சயமற்ற நிலைமை உள்ளது. | -மேற்படி- |
| (ஊ) | கோட்டே றம்பார்ட் உயிரியல் பல்வகைமை பூங்காவின் அபிவிருத்தி | 2020 திசெம்பர் 02 | 2021 மே 05 வரையிலும் பணிகள் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. | 436 | கொவிட்-19 உலகளாவிய தொற்றுநோயின் நேரடி மற்றும் மறைமுக தாக்கங்கள் தாமதத்திற்கு காரணமாகின்றன. | -மேற்படி- |
| (எ) | கொலன்னாவ கால்வாய் திசைதிருப்பல் திட்டம் கட்டம் IV | 2020 யூலை 28 | 2021 மே 05 வரையிலும் பணிகள் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. | 245 | உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலின் நிச்சயமற்ற விளைவுகள் மற்றும் தொழிலாளர் பற்றாக்குறை, பொதுத் தேர்தல், கொவிட் - 19 தொற்றுநோய் போன்ற காரணங்களால் ஒப்பந்தம் தாமதமாகியுள்ளது. | -மேற்படி- |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (ஏ) | சென் செபஸ்ரியன் தெற்கு லொக்கின் பம்பி நிலையத்தின் பொறி வடிவமைப்பை வழங்கி நிறுவுதல். | 2020 செப்தெம்பர் 30 | 2021 மே 05 வரையிலும் பணிகள் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. | 215 | ஆரம்ப ஒப்பந்தம் பூர்த்தி செய்யப்படும் திகதி 2020.10.18 வரை நீடிக்கப்பட்டது. | -மேற்படி- |

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | ஒப்பந்தங்களை வழங்குவதில் ஏற்பட்ட தாமதங்கள் மற்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் காரணமாக, 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரொறிங்ரன் மற்றும் புதிய முகத்துவாரம் சுரங்கப் பாதைகளின் நிர்மாணத்தின் செயன்முன்னேற்றம் முறையே 65 சதவீதம் மற்றும் 88 சதவீதம் ஆகும். 2020 மே 30 அளவில் நிர்மாணம் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்த போதிலும் அது 2021 நவம்பர் 30 வரை நீடிக்கப்பட்டது. எனவே, அத் தினத்தில் பணிகளை பூர்த்தி செய்வது சந்தேகத்திற்கிடமாக காணப்பட்டது. | தற்போது கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தின் நிபந்தனைகளின் பிரகாரம் Force majeure நிலைமையைக் கருத்தில் கொண்ட பின்னர் செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கான கால நீடிப்பு 2021 திசெம்பர் 21 வரை ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது. | பணிகளை விரைவுபடுத்துவதற்கும், நிர்மாண பணிகளை நெருக்கமாக கண்காணிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ரூபா 6,760.52 மில்லியன் பெறுமதியான ஐந்து ஒப்பந்தங்களின் நிர்மாணப் பணிகள் அதாவது சென் செபஸ்ரியன் நோர்த் லொக் கதவுகள் மற்றும் பம்பி நிலையம் என்பவற்றின் வடிவமைப்பு மற்றும் கட்டிடம், அம்பத்தலே வெள்ள நீர் பம்பி நிலைய வடிவமைப்பு மற்றும் கட்டிடம், கோட்டே ராம்பார்ட்டில் உள்ள உயிரியல் பல்வகைமை பூங்காவின் அபிவிருத்தி, கொலன்னாவ கால்வாய் திசை திருப்பல் திட்ட கட்டம் I மற்றும் கட்டம் IV என்பன மீளாய்வாண்டில் பூர்த்தி செய்யப்படுவதற்கு இணங்கப்பட்ட போதிலும் அவை இணங்கப்பட்டவாறு பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | வெள்ளப்பெருக்கு மற்றும் சீரற்ற வானிலை, உயிர்த்த ஞாயிறு தாக்குதல், கொவிட் - 19 தொற்றுநோய் போன்ற பல்வேறு காரணங்களால், 6 உப செயற்திட்டங்களை பூர்த்தி செய்தல் தாமதமாகியிருந்தது. | பணிகளை விரைவுபடுத்துவதற்கும், நிர்மாண பணிகளை நெருக்கமாக கண்காணிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | நோரிஸ் கால்வாயை தரமுயர்த்துவதற்கான ஒப்பந்தம் 2018 ஆகஸ்ட் 21 இல் ரூபா 353 மில்லியன் வழங்கப்பட்டதுடன் 2019 ஆகஸ்ட் 23 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு இணங்கப்பட்டது. எனினும், 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிர்மாணத்தின் மெதுவான பௌதீக மற்றும் நிதி செயன்முன்னேற்றம் முறையே 78 சதவீதம் மற்றும் 58 | உப செயற்திட்ட நிர்மாண வேலையின் செயன்முன்னேற்றம் தாமதமாகியிருந்ததுடன் செல்லுபடியான காரணங்களால் மெதுவான செயன்முன்னேற்றத்தை காட்டியிருந்தது. | பணிகளை விரைவுபடுத்துவதற்கும், நிர்மாண பணிகளை நெருக்கமாக கண்காணிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சதவீதம் ஆக காணப்பட்டன. மேலும், ஆர்னோல்ட் ரத்நாயக்க மாவத்தையில் உள்ள CMC அடுக்குமாடி குடியிருப்புக்களை தகர்க்கும் பணி 2021 மே 05 வரையிலும் தொடங்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால் செயற்திட்ட காலப்பகுதியினுள் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்படுவது சந்தேகத்திற்கிடமாக உள்ளது. | | |
| (ஈ) | 2017 ஆகஸ்ட் முதல் உண்மையான நேர கட்டுப்பாட்டு முறைமையை உருவாக்கி அமுல்படுத்துவதற்கு செயற்திட்டத்தால் ஆலோசனையாளர் ஒருவர் பணிக்கமர்த்தப்பட்டு, 2020 யூன் 30 வரை ரூபா 32.9 மில்லியன் தொகை படிகளாக செலுத்தப்பட்டிருந்தது. எனினும், பணிகளை பூர்த்தி செய்யாமல் திடீரென ஆலோசனையாளரின் சேவை நிறுத்தப்பட்டது. இதன் விளைவாக, செயற்திட்டத்திற்கு ஆலோசனையாளரிடமிருந்து எதிர்பார்த்த விளைவுகள் பெறப்பட்டிருக்கவில்லை. | தெளிவாக பதிலளிக்கப்படவில்லை. | செயற்திட்டத்தின் நோக்கங்களை பின்பற்ற வேண்டியதுடன் செயற்திட்டத்தின் செயற்பாட்டு கிரயத்தை குறைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | பம்பலப்பிட்டி மற்றும் கொள்ளுப்பிட்டி நடைபாதை மேல்பாலத்தின் வடிவமைப்பு மற்றும் நிர்மாண மேற்பார்வைக்கான இரண்டு ஆலோசனை ஒப்பந்தங்கள் 2013 திசெம்பரில் கம்பனி ஒன்றிற்கு ரூபா 27.22 மில்லியன் கிரயத்தில் வழங்கப்பட்டிருந்தது. நிர்மாணம் Mega Polish பிரதான திட்டத்துடன் இணங்கியிருக்காதமை கம்பனிக்கு தெரிவிக்கப்படாததற்காக ரூபா 16.79 மில்லியன் ஆலோசனையாளர் கட்டணம் செலுத்தப்பட்டது. | தெளிவாக பதிலளிக்கப்படவில்லை. | நோக்கங்களை பின்பற்ற வேண்டும். |

**3.4 செயற்திட்ட நோக்கங்களிற்கு வெளியே மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள்**

| கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| நகர அபிவிருத்தி நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட விளம்பரக் கட்டணங்களுக்காக செலுத்தப்பட்ட ரூபா 5.96 மில்லியன் தொகை செயற்திட்டச் செலவினங்களாக செயற்திட்டக் கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. | ஜேஈ/02/01/2020 இன் பிரகாரம் மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட எல்கேஆர் 5.96 மில்லியன் விளம்பரக் கட்டணங்கள், அமைச்சின் நிதிப் பதிவேட்டில் விளம்பரச் செலவினமாகக் கணக்கீடு செய்யப்பட்டு பின்னர் அது அமைச்சு கணக்குகள் மூடப்படும் நேரத்தில் GOSL செலவினத்தில் அறவிடப்பட்டிருந்தது. | செயற்திட்டத்தின் நோக்கெல்லை பின்பற்றப்பட வேண்டும். |

**3.5 தீர்வு காணப்படாத முன்னைய கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட விடயங்கள்**

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | உண்மையான நேர வெள்ள கட்டுப்பாட்டுப் பிரிவை அமைப்பதற்கு ரூபா 6 மில்லியன் கிரயத்தில் பத்தரமுல்லை பிரதேசத்தில் வீடு ஒன்று வாடகைக்கு பெறப்பட்டிருந்த போதிலும் அந்நோக்கத்திற்காக இந்த கட்டிடம் பயன்படுத்தப்படாமல் பத்தரமுல்லையில் உள்ள செத்சிறிபாய கட்டம் 11 கட்டிடத்தில் வாடகைக்கு பெறப்பட்ட இடத்திற்கு வாடகை, மின்சாரம் மற்றும் சுகாதார வசதிகள் என ரூபா 10.43 மில்லியன் தொகை செலுத்தப்பட்டுள்ளது. | உண்மையான நேரக் கட்டுப்பாட்டு (RTC) நிலையம் ஆரம்பத்தில் பத்தரமுல்லையில் சிறிய அளவிலான வாடகைக் கட்டிடத்தில் 2016 இல் நிறுவப்பட்டது. செயற்பாடுகளை விரிவுபடுத்துவதற்கு இடம் போதுமானதாக இல்லாததால், செத்சிறிபாயவின் 10 ஆவது மாடியின் "இ" பகுதியும் 2017 இல் வாடகைக்கு பெறப்பட்டதுடன் RTC இன் செயற்பாடுகள் படிப்படியாக விரிவுபடுத்தப்பட்டது. | செயற்திட்டத்தின் செயற்பாட்டு கிரயத்தை குறைப்பதற்கு தேவையான நடவடிக்கையை எடுத்தல். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | செயற்திட்டத்திற்கு 2020 திசெம்பர் 31 வரை உண்மையான நேர வெள்ளக் கட்டுப்பாட்டு முறைமையின் அபிவிருத்தி மற்றும் அமுல்ப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக ரூபா 164.6 மில்லியன் தொகை ஏற்பட்டிருந்த போதிலும் எதிர்பார்த்த விளைவை அடைந்துகொள்ள முடியாதிருந்தது. | உண்மையான நேரக் கட்டுப்பாட்டு (RTC) முறைமை முழுமையாக உருவாக்கப்பட்டிருக்கவில்லை, ஏனெனில் செயற்திட்டம் பூர்த்தியடையும் திகதி 2021 திசெம்பர் 31 ஆகும். | முறைமை தொடர்பான பணிகளை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் கொழும்பு 05, கிரிமண்டல மாவத்தையில் உள்ள வெள்ளக் கட்டுப்பாடு மற்றும் நீர் முகாமைத்துவ நிலையத்திற்கான கட்டிட நிர்மாணப் பணிகள் கணக்காய்வு திகதியான 2021 மே 05 வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, புதிய கட்டிடத்தில் RCT முறைமையை நிறுவும் நடவடிக்கைகளை கணக்காய்வு திகதியான 2021 மே 05 வரையிலும் தொடங்க முடியாதிருந்தது. இந்தக் காரணங்களால் ரூபா 92.15 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட கணனிகள், கணனி திரைகள், சேர்வர்கள் போன்ற இந்த முறைமை தொடர்பான உபபாகங்களை நிறுவுவதற்கு நிரந்தர இடம் இருக்கவில்லை. மேலும், மேற்படி கட்டிடம் முழுமையடையாததால் இந்த முறைமை தொடர்பான ரூபா 643.3 மில்லியன் பெறுமதியான பெறுகை நடவடிக்கைகள் தாமதமாக வேண்டியிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது. எவ்வாறாயினும், செயற்திட்டம் 2021 திசெம்பர் 31 இல் மூடப்பட வேண்டியிருந்தது. கணக்காய்வின் போது மேற்படி பெறுகை நடவடிக்கைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியைப் பயன்படுத்த முடியாதிருந்தமை சந்தேகத்திற்குரியதாக உள்ளது. | பதில் 4.6.இ இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கொள்வனவு செய்யப்பட்ட உபபாகங்கள்/ உபகரணங்கள் நிலையானவை மற்றும்/ அல்லது 10 ஆவது மாடி RTC பிரிவில் காணப்படுகின்றதுடன் நிர்மாணம் பூர்த்தியடைந்ததும் புதிய கட்டிடத்திற்கு மாற்றப்படும். புதிய கட்டிடத்தை பூர்த்தி செய்வதில் தாமதம் ஏற்பட்டதால், சில பெறுகைகள் தாமதமாகியிருந்தமை ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. | நிர்மாண பணிகளை உடனடியாக பூர்த்தி செய்வதற்கு பொறுப்பான தரப்பினரை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |